71. உலகின் பெரிய மற்றும் அதிக எடை கொண்ட பாலூட்டி?

(1) நீலத்திமிங்கலம் (2) யானை (3) சிங்கம் (4) புலி

72. கீழ்க்கண்டவற்றுள் எது முட்டையிடும் பாலூட்டி?

(1) கங்காரு (2) பிளாடிபஸ் (3) பென்குயின் (4) திமிங்கலம்

73. மிக வேகமாக நீந்தும் மீனின் உந்துவிசைக்கு காரணம்?

(1) இடுப்பு துடுப்பு (2) தோள் துடுப்பு (3) முதுகுத் துடிப்பு (4) வால் துடுப்பு

74. பாலூட்டிகளின் மிக முக்கிய சிறப்பு பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுவது?

(1) வெப்பம் மாறா தன்மை (2) நான்கு அறை இதயம்

(3) உதரவிதானம் பெற்றிருத்தல் (4) விலா எலும்புக் கூடு

75. பொதுவாக அட்டைகள் ________.

(1) இரத்த உண்ணிகள் (2) ஊன் உண்ணிகள்

(3) பூச்சி உண்ணிகள் (4) தாவர உண்ணிகள்

76. நாடாப் புழு ஒட்டுண்ணியாக வாழுமிடம் ________.

(1) கல்லீரல் (2) வயிறு

(3) குடல் (4) மேற்கண்ட எல்லா இடங்களிலும்

77. கீழ்கண்டவற்றில் எது அதிக சிற்றினங்களை உடையது?

(1) பூச்சிகள் (2) பறவைகள்

(3) ஆஞ்சியோஸ்பெர்ம்ஸ் (4) பூஞ்சைகள்

78. கீழ்க்கண்டவற்றில் எது செவுள் மூலம் சுவாசிக்கிறது?

(1) திமிங்கலம் (2) ஆமை (3) தவளை (4) இறால்

79. **கீழ்க்கண்டவற்றுள்** கணுக்காலிகளின் சிறப்பு பண்பு எது?

(1) நீர்வாழ் தனி உயிரிகள்

(2) கைட்டினாலான புறச்சட்டகம் மற்றும் கணுக்களையுடைய கால்கள்

(3) நாற்கரம்

(4) மேற்கண்ட எதுவுமில்லை

80. மெல்லுடலி என்பது?

(1) ஈரடுக்கு கொண்டது, உடற்குழி அற்றது. (2) மூவடுக்கு கொண்டது, உடற்குழி அற்றது.

LIVEWORKSHEETS

(3) ஈரடுக்கு கொண்டது, உடற்குழி உடையது. (4) மூவடுக்கு கொண்டது, உடற்குழி உடையது.

81. எந்த தொகுதி உயிரினங்களின் புறச்சட்டகம் கைட்டினால் ஆனது?

(1) கணுக்காலிகள் (2) துளையுடலிகள் (3) வளைதசை புழுக்கள் (4) முட்தோலிகள்

82. கீழ்க்கண்டவற்றுள், எந்த இரத்த உறைவு எதிர்பொருளை அட்டை சுரக்கிறது?

(1) ஹிருடின் (2) ஹெபரின் (3) செரடோனின் (4) ஹிஸ்டமைன்

83. கீழ்க்கண்ட விலங்கு தொகுதியில் எது முழுவதுமாக கடலில் வாழ்கிறது?

(1) கணுக்காலிகள் (2) துளையுடலிகள் (3) மெல்லுடலிகள் (4) முட்தோலிகள்

84. நான்கு அறை இதயம் இல்லாதது எது?

(1) பாலூட்டிகள் (2) பறவைகள் (3) பாம்பு (4) முதலை

85. நீர் மற்றும் நிலம் ஆகிய இரு வாழிடங்களிலும் வாழக்கூடிய விலங்குகளைக் கொண்ட முதல் நான்கு காலி, முதுகெலும்பு உயிரி எது?

(1) ஊர்வன (2) இருவாழ்விகள் (3) பறவைகள் (4) மீன்கள்

86. முதுகெலும்பிகளில் முதலில் தோன்றிய வெப்ப இரத்த உயிரினம் எது?

(1) ஊர்வன (2) இரு வாழ்விகள் (3) பறவைகள் (4) மீன்கள்

87. குளிர் இரத்த பிராணிகள் எவை?

(1) மீன், தவளை, பல்லி, மனிதன் (2) மீன், தவளை, பல்லி, மாடு

(3) மீன், தவளை, பல்லி, பாம்பு (4) மீன், தவளை, பல்லி, காகம்

88. காற்றறைகள் மற்றும் காற்று எலும்புகள் எவற்றில் காணப்படுகிறது?

(1) மீன்கள் (2) பறவைகள் (3) தவளைகள் (4) வௌவால்கள்

89. பொருத்துக

(a) குழியுடலிகள் - (i) நத்தை

(b) தட்டைப்புழுக்கள் - (ii) நட்சத்திர மீன்

(c) முட்தோலிகள் - (iii) நாடாப்புழு

(d) மெல்லுடலிகள் - (iv) ஹைட்ரா

(1) a - (iv), b - (iii), c - (ii), d - (i) (2) a - (iv), b - (ii), c - (iii), d - (i)

(3) a - (iv), b - (i), c - (iii), d - (ii) (4) a - (i), b - (ii), c - (iii), d - (iv)

90. கரோலஸ் லின்னேயஸ் என்பவர் _______

(1) இங்கிலாந்து தாவரவியலாளர் (2) இந்திய தாவரவியலாளர்

(3) ஜெர்மானிய தாவரவியலாளர் (4) ஸ்வீடன் தாவரவியலாளர்

LIVEWORKSHEETS

91. முட்தோலி வகை விலங்கு எது?

(1) ஜெல்லி மீன் (2) நட்சத்திர மீன் (3) ஆக்டோபஸ் (4) காட்பிஸ்

92. நீரிலும் நிலத்திலும் வாழும் தாவரம் எது?

(1) ஃபியூனேரியா (2) காரா (3) அடியாண்டம் (4) சைகஸ்

93. கூற்று (A): ஜிம்னோஸ்பெர்ம்கள் திறந்த விதை கொண்ட தாவரங்கள் என அழைக்கப்படுகின்றன.

காரணம் (R): சூல்கள் திறந்தவை மற்றும் சூற்பை காணப்படுவதில்லை.

(1) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம். (2) (A) சரி, (R) தவறு

(3) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம் அன்று. (4) (A) தவறு, (R) சரி

94. கூற்று (A): ஆல்காக்களின் உடலமைப்பு தாலஸ் எனப்படும்.

காரணம் (R): தாவர உடல் வேர், தண்டு மற்றும் இலை என வேறுபாடுடன் காணப்படுகிறது.

(1) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம்.

(2) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம் அன்று.

(3) (A) சரி, (R) தவறு

(4) (A) தவறு, (R) சரி

95. இராபர்ட் ஹார்டிங் விட்டேக்கர் வகைப்பாட்டில் மூன்றாவதாக இடம் பெறும் உலகம் எது?

(1) மொனிரா (2) பூஞ்சை (3) தாவரங்கள் (4) புரோடிஸ்டா

96. கூற்று (A): பச்சையம் அற்ற தாவரம் பூஞ்சைகள் ஆகும்.

காரணம் (R): பச்சையம் காணப்படுவதில்லை. பிற சார்பு ஊட்டமுறை கொண்டவை.

(1) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம். (2) (A) சரி, (R) தவறு

(3) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம் அன்று (4) (A) தவறு, (R) சரி.

97. இரு சொல் பெயரிடும் முறை அறிமுகப்படுத்திய ஆண்டு?

(1) 1632 (2) 1631 (3) 1623 (4) 1753

98. பொருத்துக.

(1) பிரையோஃபைட்டுகள் - (i) திறந்த விதைத் தாவரங்கள்

(2) டெரிடோஃபைட்டுகள் - (ii) வாஸ்குலார்த் திசுக்களற்ற பூவாத் தாவரங்கள்

(3) ஜிம்னோஸ்பெர்ம்கள் - (iii) மூடிய விதைத் தாவரங்கள்

(4) ஆஞ்சியோஸ்பெர்ம்கள் - (iv) வாஸ்குலார்த் தொகுப்புடைய பூவாத் தாவரங்கள்

(1) a - (i), b - (ii), c - (iii), d - (iv) (2) a - (ii), b - (iii), c - (iv), d - (i)

(3) a - (ii), b - (iv), c - (i), d - (iii) (4) a - (iv), b - (ii), c - (i), d - (iii)

LIVEWORKSHEETS

99. நாம் உண்ணும் அரிசியின் அறிவியல் பெயர் எது?

(1) *டிட்ரிகம் வல்கேர்* (2) *பைசம் சட்டைவம்*

(3) *அல்லியம் சட்டைவம்* (4) *ஓரைசா சட்டைவா*

100. நமது வீட்டில் வளர்க்கும் செல்ல பிராணி நாயின் விலங்கியல் பெயர்?

(1) *கேனிஸ் பெமிலியாரிஸ்* (2) *மஸ்கா டொமஸ்டிகா*

(3) *ஃபெலிஸ் ஃபெலிஸ்* (4) *பான்திரா லியோ*

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

101. உருளைக்கிழங்கின் இருசொற் பெயர் _______. [NMMS-2014]

(1) *ஓரைசா சட்டைவா* (2) *மாஞ்சிஃபெரா இண்டிகா*

(3) *சொலானம் டியுபரோஸம்* (4) *ஹைபிஸ்கஸ் ரோஸாசைனன்சிஸ்*

102. நீர்த் தேவையின் அடிப்படையில் தாவரங்களை வகைப்படுத்தியவர் யார்? [NMMS-2016]

1) பிளம்மிங் 2) வார்மிங் 3) டார்வின் 4) மெண்டல்

103. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2018)

(1) தவளை - *மஸ்கா டொமஸ்டிகா*

(2) புறா - *ரானா ஹெக்ஸாடக்டைலா*

(3) கரப்பான் பூச்சி - *பெரிபிளானேட்டா அமெரிக்கானா*

(4) மனிதன் - *கொலம்பாலிவியா*

104. பொருந்தாத இணை / இணைகளைக் கண்டறியவும். (NMMS - 2020 - 21)

a) மெல்லுடலிகள் - கடினமான உடல் மற்றும் ஓடு இல்லாதவை

b) கணுக்காலிகள் - இணைப்புகள் இல்லா கால்கள்

c) தட்டைப்புழுக்கள் - சுடர் செல்கள்

d) வளை தசை புழுக்கள் - கண்டங்களால் ஆன உடல்

(1) a மட்டும் (2) c மற்றும் d மட்டும்

(3) c மட்டும் (4) a மற்றும் b மட்டும்

105. தேங்காயின் தாவரவியல் பெயர் **(NMMS - 2020 - 21)**

(1) *அல்லியம் சட்டைவம்* (2) *ஓரைசா சட்டைவா*

(3) *காக்கஸ் நியூசிபெரா* (4) *சிட்ரஸ் செனன்ஸிஸ்*

LIVEWORKSHEETS